National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 11 December 2022

# ரத்தப் புற்றுநோய்க்கு புதிய கண்டுபிடிப்பு




புதிய தொழில்நுட்பத்தின் உதவியுடன் மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட திருமதி சிந்தியா டான், தனது அனுபவங்களை நேற்று செய்தியாளர் கூட்டத்தில் பகிர்ந்து கொண்டார். உடன் அவரது மகன் கீத் சான் (வலம்) மற்றும் இணைப் பேராசிரியர் கோ லியாங் பியு (இடம்).
**படம்: தேசிய பல்கலைக்கழக புற்றுநோய் கழகம்.**

சிங்கப்பூரில் குறிப்பிட்ட உயிரணுக்களை கண்டறியும் புதிய தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கண்டுபிடிப்பு ரத்த புற்றுநோயாளிகளுக்கு பேருதவியாக இருக்கும் என எதிர்பார்க் கப்படுகிறது. மாற்று அறுவை சிகிச்சைக்குத் தேவையான பொருத்தமான மூல உயிரணுக் களை புதிய தொழில்நுட்பம் மூலம் விரைவில் அடையாளம் காண முடியும். இதற்கு முன்பு பொருத்த மானதாக இல்லை என்று கருதப் பட்ட நன்கொடையாளர்களிடமி ருந்தும் மூல உயிரணுவை கண்டு பிடிக்க முடியும்.

நன்கொடையாளர்களின் உயிரணுக்களை பெறுபவரின் உடல் ஏற்க மறுப்பது அல்லது தொற்று நோய் ஏற்படுவது போன்ற சிக் கல்களை புதிய நடைமுறை தவிர்க்க உதவுகிறது.

ஹாப்லோ–2017 என்பது புதிய நடைமுறையின் பெயர். நேற்று தேசிய பல்கலைக்கழக சுகாதாரக் குழுமத்தின் செய்தியாளர் கூட் டத்தில் இது பற்றி அறிவிக்கப் பட்டது.

தேசிய பல்கலைக்கழக புற்று நோய் கழகத்தின் ரத்த புற்றுநோய் மருத்துவர் குழு, இதர உள்ளூர் மருத்துவப் பராமரிப்புத் துறையின் ஆய்வாளர்களுடன் சேர்ந்து புதிய முறையை உருவாக்கியிருக்கிறது. கடந்த 2017ஆம் ஆண்டிலிருந்து புதிய முறையின் கீழ் ஐம்பது நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்த சிகிச்சை முறையை ஆய்வாளர் கள் தொடர்ந்து மேம்படுத்தி வரு கின்றனர்.

பொதுவாக மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படும் பத்தில் மூன்று நோயாளிகளுக்கு மட்டுமே முழுமையான பொருத்தமான அவ ரது குடும்பத்திற்குள் நன்கொடை யாளரைக் கண்டுபிடிக்க முடியும். அவர்களில் பெரும்பாலோர் உடன் பிறந்தவர்கள் அல்லது பெற்றோ ராக இருப்பது வழக்கம்.

ஒவ்வோர் உடன் பிறந்தவர் க ளுக்கும் நோயாளிகளுக்கு முழு மையான பொருத்தத்தைக் கண் டறிய நான்கில் ஒரு வாய்ப்பு மட் டுமே உள்ளது. பெற்றோர் அல் லது பிள்ளைகளிடையே அந்தப் பொருத்தம் பாதியாக இருக்கிறது.

மேலும் சிறுபான்மை இனத்த வர்களுக்கு உலகளவில் பொருத்த மான மூல உயிரணு நன்கொடை யாளர்களைக் கண்டுபிடிக்கும் வாய்ப்பு குறைவாக உள்ளது. இந்த நிலையில் ஹாப்லோ–17 நடை முறை, நோயாளிகளின் பொருத்த மற்ற நன்கொடையாளர்களிடமும் மூல உயிரணுக்களை அடையா ளம் காண உதவுகிறது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.